இணைப்பு I

[535ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினா 66-ன் விடையைக் காண்க.]

1961-ம் ஆண்டு ரவீந்திரநாத் தாகூர் நூற்றாண்டு விழாவை ஒட்டி மைய அரசு மாநிலங்களில் ரவீந்திரர் கலை அரங்கு கட்ட ஒரு திட்டம் தயாரித்து அக்கலையரங்கை கட்ட ரூ. 2.75 லட்சம் மானியமளிக்கவும் முன்வந்தது. இத்திட்டத்தை ஏற்று இவ்வரசு சென்னையில் ரவீந்திரர் கலையரங்கு ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்து, அதற்காக சென்னை நுங்கம்பாக்கம், கிரீம்ரோடு, சுமார் 64 கிரௌண்ட் நிலம் ஒதுக்கிடு செய்தது. மேலும் அரங்கத்தை கட்டுவதற்கான வரைபடங்கள் மதிப்பீடுகளையும் தயார் செய்து ஒப்புதல் பெற்றது. அதனடிப்படையில் அரங்கத்திற்கான அஸ்திவாரமும் சில கட்டிடப் பகுதிகளும் கட்டி முடிக்கப்பட்டது. மைய அரசும் தனது மானியமாக ரூ. 3.50 லட்சம் அளித்தது. ஆனால் விலைவாசி ஏற்றத்தின் காரணத்தால் இவ்வரங்கை கட்டி முடிப்பதற்கு அதிகச் செலவாகும் என்பதாலும் அரசின் நிதி நிலைமை உத்தேசித்தும், அச்சமயம் பாரதியார் நினைவுச் சங்கம் தாங்கள் அரங்கம் ஒன்று கட்டுவதற்குத் தேவையான நிலத்தை ஒதுக்குமாறு அரசை வேண்டினர். இந்த வேண்டுகோளை பரிசீலித்து புதிதாக பாரதியார் கலை அரங்கிற்கு நிலம் அளிப்பதற்குப் பதிலாக ஏற்கனவே ரவீந்திரர் கலை அரங்கம் கட்டும் இடத்தையும் கட்டிடத்தையும் பாரதி நினைவுச் சங்கத்திற்கு அளித்து அரங்கை கட்டி முடிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என முடிவெடுத்தது. இதற்கிணங்க ரவீந்திரர் அரங்கை கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட 64 கிரௌண்ட் நிலத்தையும் அதிலுள்ள கட்டிடத்தையும் பாரதியார் நினைவு மன்றத்திற்கு அரசு அளித்து விட்டது. இதனை ரவீந்திரர் கூடமென்றும், பாரதியார் அரங்கு என்றும் அழைக்க வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டது.

இணைப்பு II

[515ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினா 76-ன் விடையைக காண்க.]

மத்திய தொழில் சிவில் சப்ளை மந்திரியால் 6—11—1974 அன்று புதுடில்லியில் கூட்டப்பட்ட மாநில தொழில் துறை மந்திரிகளின் மாநாட்டில் இவ்வரசின் சார்பில் அப்போதிருந்த தொழில்துறை அமைச்சர் கலந்துகொண்டார். இருப்பினும், பொதுவாக தொழில் வளர்ச்சி பற்றிய பிரச்சினைகள்

விவாதிக்கையிலே, இடையில் தொழில் உற்பத்தியில் பொதுவான போக்குகள், தொழில்களுக்கான உரிமங்கள் வழங்குவதில் வழி முறைகள் ஆகியவையும் விவாதிக்கப்பட்டன. 7—11—1974, 8—11—1974 ஆகிய நாட்களில் சிறுதொழில் வாரியம் சிறு தொழில்கள் சாதனை பற்றி பரிசீலித்தது. அதில் தொழில்துறை அமைச்சரும் கலந்துகொண்டார். கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன :—

(அ) நாடு முழுவதிலும் சிறுதொழில் பிரிவுகளைப் பதிவு செய்வதில் ஒரே சீரான நடைமுறை இருக்க வேண்டும்.

(இ) சிறுதொழில் பிரிவு என்பதற்கான பொருள் விளக்கம் ரூ. 10 லட்சத்திற்கு மேற்படாது மதிப்புடைய யந்திரமும் தளவாடமும் கொண்ட ஒரு தொழில் பிரிவு என்று மாற்றப்பட வேண்டும்.

(உ) சிறுதொழில் துணைப் பிரிவுகள் என்பது, துணைப் பிரிவுகள் என்பதோடு, யந்திர தளவாடம் பொருத்தமட்டில் அவற்றின் மதிப்பு ரூ. 15 லட்சத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் என்று மறு விளக்கம் அளிக்கப்படவேண்டும்.

(எ) ரூபாய் 2 லட்சத்திற்கும் குறைந்த முதலீடு கொண்ட தொழில் பிரிவுகள் மிகச் சிறுதொழில்கள் எனப்பட்டு அவற்றிற்குத் தனிச் சலுகைகள் அளிக்கப்படவேண்டும்.

மேலே (அ) இனத்தில் கூறியவாறு ஒரே சீரான பதிவு முறையை வரையறுத்து இந்திய அரசு ஏற்கனவே ஆணைகள் பிறப்பித்துள்ளது.

The State Government was represented by the then Minister for Industries at the conference of the State Ministers of Industries convened by the Union Minister of Industry and Civil Supplies at New Delhi on 6th November 1974. However the discussions at this Conference related to the general trends in Industrial Production in the country, industrial licensing, guidelines for Industries, etc. The problems of Small Scale Industrial Units were discussed along with the problems of general industrial development. The Minister for Industries also attended on 7th November 1974 and 8th November 1974 the meeting of the Small Scale Industries Board, which reviewed the performance of Small Scale Industrial Units. The following decisions were taken by the Board :—

(a) There should be uniform procedure for registration of Small Scale Industrial Units throughout the country.

(*b*) The definition of a Small Scale Industrial Unit should be changed to include any unit having plant and machinery not exceeding Rs. 10 lakhs in value.

(*c*) Ancillary Small Scale Units should be redefined as units being ancillary units and not exceeding a value of Rs. 15 lakhs in respect of their plant and machinery.

(*d*) Units with the investment of less than Rs. 2 lakhs should be called ' tiny units ' and given special concessions.

Government of India have already issued orders prescribing a uniform procedure for registration as envisaged in item (*a*) above.

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS